8.11.2008

செ.வெ.எண் 968

## செய்தி குறிப்பு

தமிழகத்தின் மின் நிலைமை குறித்தும் அதை மேம்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் நீண்டகாலத் திட்டம் பற்றியும் 7–11–2008 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், நிதித்துறை முதன்மை செயலாளரும், எரிசக்தி துறை முதன்மைச் செயலாளரும், மின் வாரியத் தலைவரும் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தின் இறுதியில் தற்போதைய மின் நிலமையை சீரமைக்க எடுக்கப்பட்ட முடிவுகள் பின் வருமாறு.

1. தமிழகத்தில் மின் உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்கள், ஒப்பந்தப்படி தற்போது நுகர்வோருக்கு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும் மின்சாரத்திற்கும் மேலாக மின்சார உற்பத்தி செய்தால், அதை தமிழகத்திலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாக விற்பதற்கு (Open access) தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் இசைவு பெற்று, அனுமதி வழங்கப்படும். இனி இதுபோன்ற மின் விற்பனைக்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட சுழற்சி கட்டணத்தைத் (wheeling charges) தவிர மானியத்தை ஈடுசெய்யும் கட்டணம் (cross subsidy charges) ஏதும் செலுத்தத் தேவையில்லை.

மானியத்தை ஈடுசெய்யும் கட்டணத் தள்ளுபடி, தமிழ்நாடு மின்சார வாரிய மின் விநியோகம் சீரடையும்வரை நடைமுறையில் இருக்கும். இதன் மூலம் தொழிற்சாலைகள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேலாக மின்சாரம் தேவைப்படின் அதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது.

2. தற்போது புதிய தொழில்கள் தொடங்கப்படுவதற்கு சலுகைகள் வழங்கும்போது இத் தொழிற்சாலைகள் சுய மின் உற்பத்தி நிலையம் (Captive Generating Sets) தொடங்கினால் அதற்கான செலவினை மொத்த மூலதனமாக கணக்கில் எடுக்கப்படுவதில்லை. இனி, சுய மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்க மேற்கொள்ளப்படும் முதலீடும் மொத்த மூலதன கணக்கில் எடுக்கப்பட்டு அரசு சலுகைகள் வழங்கப்படும்.

3. சிறுதொழில் செய்வோர்களுக்கு 125 கே.வி.ஏ. திறன் வரை மின்னாக்கி (generator) வாங்குவதற்கு 25 சதவிகிதம் மானியம், அதிகபட்சமாக ரூபாய் 1.50 இலட்சம் வரை வழங்கப்படும்.

4. தமிழகத்தில் தனியார் துறையில் உருவாக்கப்படும் புதிய மின் திட்டங்களுக்கு அரசு தொடர்ந்து ஆதரவு அளிக்கும். அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை இதர பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்குத் தேவையான கட்டமைப்பினை (Transmission infrastructure) தமிழக மின்வாரியம் ஏற்படுத்தும்.

5. நேற்று மாலை, தலைமைச் செயலர் அவர்கள் இது குறித்து சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகளைக்கலந்து அவர்களது ஆலோசனைகளையும் பெற்ற பின்னர் இம்முடிவுகள் உறுதிபடுத்தப்பட்டன.

இந்த முடிவுகளுக்கு ஏற்ப உடனடியாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறும், அரசு ஆணைகள் வெளியிடுமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

---

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9